**மாதிரி வினாத்தாள்**

செயற்கூறுகள்-பகுதி III

12th Standard

**கணிப்பொறி இயல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண் 19-ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்..

Time : 01:00:00 Hrs

Total Marks : 40

## பகுதி - அ

10 x 1 = 10

1) செயற்கூறின் பெயருடன் எந்த அளபுருக்கள் காற்புள்ளியால் பிரிக்கப்பட்டு பிறை அடைப்புகுறிக்குள் தரப்பட்டு இருக்கும்

(a) முறையான (b) மாதிரி (c) பொய்யான (d) மெய்யான

2) செயற்கூறின் பெயருடன் பிறை அடைப்புகுறிக்குள் கொடுக்கப்படும் மெய்யான அளபுருக்கள் எவற்றின் மூலம் பிரிக்கப்படும்

(a) காற்புள்ளி (b) அரைப்புள்ளி (c) முக்காற்புள்ளி (d) புள்ளி

3) கீழ்கண்ட எது செயலுருபுகள் அல்லது அளபுருக்கள் மூலமாக செயற்கூற்றோடு தகவல் பரிமாற்றம் செய்கிறது?

(a) பெயர் (b) தரவினம் (c) செயற்குறி (d) அழைக்கும் கூற்று

4) அழைப்பு கூற்றில் இருந்து செயற்கூறினுக்கும், செயற்கூறிலிருந்து அழைப்பு கூற்றினுக்கும் இடையே தரவுகளின் பாய்வுக்கு வழிவகுப்பது

(a) பெயர் (b) குறிப்பு (c) அளபுருக்கள் (d) இவை அனைத்தும்

5) inline என்னும் சிறப்புச்சொல் எதற்குத் தரப்படும் கோரிக்கை ஆகும்

(a) செயற்கூறினுக்கு (b) நிரலுக்கு (c) பொருளுக்கு (d) நிரல் பெயர்ப்பிக்கு

6) செயற்கூறினை அழைக்கும் கூற்று இதன் மூலம் செயற்கூரோடு தகவல் பரிமாற்றம் செய்கிறது

(a) தரவினம் (b) அளபுருக்கள் மற்றும் தரவினம் (c) அளபுருக்கள் (d) செயலுருபுகள் அல்லது அளபுருக்கள்

7) அனைத்து கட்டளைத் தொகுதிகளுக்கும் செயற்கூறுகளுக்கும் மேலாக அறிவிக்கப்படும் வரையெல்லை மாறி

(a) உள்ளமை (b) கோப்பு (c) இனக்குழு (d) செயற்கூறு

8) C ++ மொழியில் செயலுருபுகள் கொண்ட செயற்கூறுகளை, எப்படி செயல்படுத்தலாம்

(a) குறிப்பு மூலம் அழைத்தல் (b) மதிப்பு மூலம் அழைத்தல் (c) (அ) அல்லது (ஆ) (d) (அ) மற்றும் (ஆ)

9) எந்தவகை அழைப்பின் போது அழைக்கப்பட்ட செயற்கூறு, தனக்கு அனுப்பி வைக்கப்படும் செயலுருபுகளின் மதிப்புகளை இறுத்தி வைக்க புதிய மாறிகளை உருவாக்குகிறது

(a) குறிப்பு மூலம் அழைத்தல் (b) மதிப்பு மூலம் அழைத்தல் (c) (அ) அல்லது (ஆ) (d) (அ) மற்றும் (ஆ)

10) செயலுருபுகள் கொண்ட செயற்கூறுகளை எத்தனை வகையில் செயல்படுத்தலாம்

(a) மூன்று (b) ஒரு வகை (c) நான்கு (d) இரு வகை

## பகுதி - ஆ

5 x 2 = 10

11) அளப்புருக்கள் என்றால் என்ன? செயற்கூறினை அளப்புருக்களுக்கு அனுப்பி வைப்பதற்கான பயன்கள் யாவை?

12) மெய்யான அளப்புருக்கள் மற்றும் முறையான அளப்புருக்கள் என்றால் என்ன?

13) மதிப்பினை திருப்பியனுப்புதல் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

14) அடுக்கங்களின் பயன் என்ன?

15) செயற்கூறு வரையெல்லை வரையறு

## பகுதி - இ

4 x 5 = 20

16) inline செயற்கூறினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

17) சி++ ன் செயற்கூறினை எ.காட்டுடன் விளக்குக. மற்றும் அதன் பயன்களை எழுதுக.

18) செயற்கூறு முன்வடிவினைப் பற்றி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

19) a) சி++ ல் செயற்கூறினை எப்படி அழைக்க முடியும்? எ.கா. உடன் விளக்குக.

**(OR)**

b) முன்னியல்பு செயலுருபுகள் என்றால் என்ன? எ.காட்டுடன் விளக்குக. மற்றும் அதன் விதிமுறைகளை எழுதுக.

*****************************************